**O.S. 114/2022** **நாள்: 17-03-2025**

PW 2 ராஜேந்திரன் த/பெ. ஆறுமுகம்

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்று கேட்டால் ரெத்தினாம்பாள் என்பவருக்கு சொந்தமானது. தாவா சொத்தின் புல எண் என்னவென்று கேட்டால், 198/2 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்று கேட்டால் 37 சென்ட் ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி, தாவா சொத்தின் எந்த பகுதியில் அனுபவத்தில் இருக்கிறார் என்று கேட்டால் வடக்கு மேற்கு பகுதியில் அனுபவத்தில் இருக்கிறார். எவ்வளவு விஸ்தீர்ணம் அனுபவத்தில் பிரதிவாதி இருக்கிறார் என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி தாவா சொத்தில் எவ்வளவு விஸ்தீர்ணம் அளவிற்கு அனுபவத்தில் இருக்கிறார் என்று கேட்டால் சுமார் 9 சென்ட் அளவிற்கு அனுபவத்தில் இருக்கிறார். வாதி தாவா சொத்தை யாரிடமிருந்து பகுதி மாற்றம் செய்து கொண்டார் என்றால் முத்துக்குட்டி ஐயர் என்பவரிடமிருந்து பகுதி மாற்றம் பெற்றுக் கொண்டார். வாதி தாவா சொத்தை குறித்து நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்று கேட்டால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதியை எனக்கு சமார் 50 ஆண்டுகளாக தெரியும். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே என்ன பிரச்சனை என்று தெரியுமா என்றால் தெரியும். வாதி எனக்கு நன்கு பரிச்சயமான நண்பர் என்பதாலும் அவர் என் ஊரைச் சேர்ந்தவர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.